**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| வழக்கு எண் | OS | 115 | of | 2013 |
|---|---|---|---|---|

**2025-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 6-ம் நாளான இன்று**

**வாதி/பிரதிவாதி**

**மனுதாரர்/எதிர்மனுதாரர்**

**தரப்பில் வா.சா.1-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **வரதராஜலு** | **தந்தை பெயர்** | |
| **கிராமம்** | | **கணவர் பெயர்** | |
| **ஜாதி** | | **தாலுக்கா** | |
| | | **சமயம்** | |
| **தொழில்** | | **வயது** | |

**நாள்-06.08.2025**

**வா.சா.-1**

**குறுக்கு விசாரணை-**

தாவா சொத்தில் புதுமனை புகுவிழா 04.12.2003 ல் நடந்தா என்றால் ஞாபகமில்லை. புதுமனை புகுவிழாவிற்கான அழைப்பிதழ் கொடுக்கப்பட்டதா என்று தெரியவில்லை. நான் அந்த விழாவில் விருந்தினராக கலந்து கொள்ளவில்லை. மோகனரங்கன், தாமோதரன், ரமேஷ் ஆகியோருக்கு 2004 ல் உயில் எழுதிக் கொடுத்தார். உயில் எழுதித் தரும்போது சொத்தின் அனுபோகத்தை கொடுத்துவிட்டாரா என்று தெரியாது. மூவருக்கும் உயில்எழுதிய கையோடு அனுபோகத்தை

கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. கந்தப்பன் என்பவரை தெரியாது. கமலகண்ணன் என் நண்பர். என் தகப்பனார் கிரயம் வாங்கிய பத்திரத்திலும் எழுதி வைத்த உயிலிலும் கந்தப்பன் சாட்சி என்றால் அதுபற்றி தெரியாது. செட்டில்மண்ட் பத்திரத்துடன் கொடுத்த தாய் பத்திரத்தை நான் படித்துப் பார்க்கவில்லை. கிரய பத்திரம் என் தகப்பனார் எவ்வாறு பெற்றார் என்ற விவரம் தெரியாது. என் தகப்பனாருக்கு எழுதப் படிக்க தெரியாது. என் பெற்றோர் மோகனரங்கத்தின் பராமரிப்பில் வாழ்ந்து வந்தார். நான் 2006ம் வரை என் தம்பி ரமேஷ் வீட்டில் வசித்து வந்தேன். ரமேஷ் வீட்டில் இருந்து மோகனரங்கன் வீடு ஒரு கிலோ மீட்டர் துாரத்தில் இருக்கும். என் தகப்பனார் நான் மற்றும் மோகனரங்கன் இருவர் மட்டுமே அனுகும் வகையில் இருந்தார் என்றால் சரியல்ல. வயதுமுதிர்வு காரணமாக என் தகப்பனாரால் சுதந்திரமாக செயல்பட முடியவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 செட்டில்மண்ட் பத்திரம் எங்கு வைத்து, என்றைக்கு தட்டச்சு செய்யப்பட்டது என்று தெரியாது. வா.சா.ஆ.1க்கான முத்திரைத்தாள் யார் வாங்கி வந்தது என்று தெரியாது. முத்திரைத்தாள் யார் பெயரில் வாங்கப்பட்டது என்று தெரியாது. என் தகப்பனார் அதில் என்றைக்கு கையெழுத்து போட்டார் என்று தெரியாது. என் தகப்பனார் பதிவாளர் அலுவலகம் சென்று பதிவு செய்தார் என்று மற்றோர் சொல்லி தெரிந்து கொண்டேன். ரவிசங்கர், ரவி ஆகியோர் யார் என்று தெரியாது. செட்டில்மண்ட் பத்திரம் எழுதுவதாக என் தகப்பனார் என்னிடம் சொல்லவில்லை. செட்டில்மண்ட் பத்திரம் தயாரிக்கப்பட்டதோ அல்லது பதிவு செய்யப்பட்டபோதோ நான் அங்கு இல்லை.

செட்டில்மண்ட் பத்திரம் ஏற்படுத்த என் தகப்பனாருக்கு யார் உதவினார்கள் என்று எனக்கு தெரியாது. கொட்டிவாக்கம் சொத்தின் மூலம் ஏறக்குறைய வாடகை வருமானம் மாதம் ஒரு லட்சம் வருமானம் வரும். கொட்டிவாக்கம் சொத்தில் முன்பகுதியை என் தகப்பனார் எனக்கு கொடுத்துள்ளார். பின்பாதியை என் தம்பி தாமோதரனக்கு கொடுத்துள்ளார். பின் பகுதிக்கு செல்ல தனியாக சந்து விடப்பட்டுள்ளது. அதன் வழியாகதான் செல்ல முடியும். செட்டில்மண்ட் பத்திரத்தில் உள்ள சாட்சிகளை இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க விசாரிக்க இயலாது. சாட்சிகள் என் குடும்ப நபர்களுக்கு தெரிந்தவர்கள் இல்லை என்பதால் அவர்களை விசாரிக்க இயலாது. வா.சா.ஆ.1 செட்டில்மண்ட் பத்திரத்தில் annexure -1A இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். சொத்து விவரத்தில் தாவா கட்டிடம் எவ்வளவு ஆண்டுகள் பழமையானது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. செட்டில்மண்ட் பத்திரத்தை நான் படித்துப் பார்க்கவில்லை. 2006 ஆம் ஆண்டில் கட்டிடத்தின் வயது 3 ஆண்டுகள் ஆகும். ஒரு ஆண்டு என்று சொல்லப்பட்டிருந்தால் சரியல்ல. என் தகப்பனார் இறந்த பிறகு முதன்முதலாக செட்டில்மண்ட் பற்றி தெரிய வந்தது. மோகனரங்கம் என்னிடம் செட்டில்மண்ட் பத்திரம் பற்றி சொன்னார். நான் 2 ம்பிரதிவாதி தாமோதரனிடம் தாவா சொத்தை கேட்டேன், ஆனால் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார். தாமோதரனுக்கு செட்டில்மண்ட் பத்திரம் பற்றி தெரியாது. என் தகப்பனாருக்கு நாங்கள் மகன்கள் அனைவரும் சேர்ந்து ஈமக் கிரயை செய்தோம். என் தகப்பனாரின் வயது

விவரக்ஙளை மோகனரங்கம் கொடுத்தார். அ.வ.எண்.27/2010 ல் குறியீடு செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.16 என் தகப்பனாரின் இறப்பு சான்றிதழ் ஆகும். அதில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் உண்மையானவை. வா.சா.ஆ.1 நிறைவேற்றப்பட்ட போது என் தகப்பனாரின் வயது 93 என்றால் இருக்கலாம். வா.சா.ஆ 1 என் தகப்பனார் படித்துப் பார்த்து புரிந்து கொண்டாரா என்று எனக்கு தெரியாது. அவருக்கு வாசகங்கள் வாசித்து காட்டப்பட்டதா என்று எனக்கு தெரியாது. எனவே வா.சா.ஆ-1 என் தகப்பனாரால் சுய நினைவுடன் தன்னிச்சையாக எழுதித் தரப்பட்ட ஆவணம் இல்லை என்றால் அதை மறுக்கிறேன். நான் புதுமனை புகுவிழாவில் வெளியே நிற்கும் புகைப்படம் அ.வ.எண்.27/2010 வழக்கில் குறியீடு செய்யப்பட்ட வா.சா.ஆ.7 ல் இடம் பெற்றுள்ளது என்றால் சரிதான். என் தம்பி தாமோதரனும் அவர் மனைவியும் முக்கியஸ்தரர்களாக முன்னிருந்து நடத்திய புகைப்படம் அதில் உள்ளது. வா.சா.ஆ.1 செட்டில்மண்ட்-படி என் தகப்பனார் எனக்கு சொத்தின் அனுபோகத்தை கொடுக்கவில்லை. செட்டில்மண்ட் எழுதுவதற்கு முன்பே என் தகப்பனார்கொட்டிவாக்கம் சொத்தின் முன் பகுதியை கொடுத்து எனக்கு வருமானத்திற்கு வழிவகை செய்து இருந்தார் என்றால் சரிதான். மற்ற ஆண் வாரிசுகள் அனைவரும் திருமணம் ஆகி குடும்பமாக வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். குடும்பஸ்தர்கள் என்பதால் அவர்களுக்கு தலா 2 சொத்துக்கள் என் தகப்பனார்

கொடுத்தார் என்றால் சரிதான். காவல் நிலையத்தில்புகார் கொடுத்தற்கான ஆதாரங்கள் தாக்கல் செய்யவில்லை. கொட்டிவாக்கம் சொத்தில் நானும் தாமோதரனும் சேர்ந்து கூட்டாக கட்டிடம் கட்டினோம். அப்போது கட்டிடம் கட்டும் செலவிற்காக தாவா சொத்து அடமானம் வைக்கப்பட்டது. முதலில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் அடமானம் வைக்கப்பட்டது. அ.வ.எண்.27/2010 வழக்கில் குறியீடு செய்யப்பட்ட வா.சா.ஆ.23 ல் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அ.வ.எண்.27/2010 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையை நான் படித்துப் பார்க்கவில்லை. வழக்கறிஞர் சொல்லி அதிலுள்ள விவரங்களை தெரிந்து கொண்டேன். நான் என் தகப்பனாருக்கு 2003-2004 வாக்கில் ரூ.5 லட்சம் கொடுக்கவில்லை. எனவே அ.வ.எண்.115/2013 நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை-இல்லை.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu